# சிறுகதை

க. புஸ்பராஜா



முழுதாகப் புகைக்கப்பட்டும், அரைகுறையாகப் புகைக்கப்பட்டும் எறியப்பட்ட சிகரட் துண்டுகள் அந்த அறையில் அங்கும் இங்குமாகப் பரவிக் கிடந்தன. படுக்கைகூட ஒரு ஒழுங்கில்லாது அது பாட்டுக்கு குழம்பிப் போயிருந்தது. தேநீர்க் கோப்பைகளும், உணவுத்தட்டுகளும் கழுவாமல் வீசப்பட்டுத் தொட்டியில் நிறைந்திருந்தது. இவைகளுக்கிடையே அறையின் ஒரு மூலையில் நாடியில் கையை வைத்து நீண்ட துாரத்துக்குப் பார்வையை எறிந்து எத்தனை மணி நேரம்தான் இருப்பேன். எனக்கே வெறுப்பாக இருந்தது.

தலை போகிற விடயம் ஒன்றும் நடந்து விடவில்லை. உலக நடப்புகளைக் கண்டு ஏங்கிப் போயுமல்ல. ஏதோ ஒன்று குறைவது போல், யாரோ பக்கத்தில் இல்லாததுபோல் ஒரு உணர்வு வாட்டிக் கொண்டுதான் இருந்தது. யாரிடமாவது சொன்னால் "சீ இதற்குப் போயா..." நளினம் பண்ணிவிடுவார்கள். உண்மைதான். ஆனால் மனதை சரியானதொரு நிலைக்குக் கொண்டு வரும் அளவுக்கு முயற்சிக்க முடியாமல் இருந்தது. அட இதுவென்னடா கோதாரியாக் கிடக்குது எனத் திட்டவேண்டும் போலும் இருக்கிறது. மெதுவாக எழுந்து முகத்தை அலம்பிவிட்டு வேலைக்குப் புறப்பட்டாயிற்று. வேலை முக்கியம்.

அடிக்கடி நண்பன் கூறுவான். தான் அந்த இடத்துக்குப் போவது வழக்கம் என்று. அவன் அதை ரசித்து, கனவு காண்பது போல், ஒளிவு மறைவின்றிச் சொல்லும்பொழுது ஒரு திரில்லாகவிருந்தாலும் மனசுக்குள் அவளை ஒரு அசிங்கமாகவே எண்ணத் தோன்றும். அவனுடன் சேர்ந்து விஸ்க்கி அடிக்கத் தொடங்கினால் போதும் இரண்டாவது கிளாஸ் பாய்ந்ததும் அவள் அலாவுதீனாக மாறி கம்பளத்தில் மிதக்கத் தொடங்கி விடுவாள். இப்படி ஒரு நாள் அவனுடன் தண்ணி அடிக்கேக்கை ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, மனிசனைக் கடித்த கதை என்பதுபோல் திடீரென அவன் "நீயும் வாவன். நான் கூட்டிக் கொண்டு போறன். கூச்சப்படாதை மச்சான் . வாழ்றதே சந்தோசத்துக்குத்தானே" என்றான். வியர்த்து கறுப்பாகிப் போயிருந்த அவனது முகத்தைப் பார்த்தேன். பகிடிக்கல்ல. அவன் மிக ஆர்வத்துடன் கேட்பது போல்தான் என்னைப் பார்த்துக் கொண்டிருந்தான். கோபமாக வந்தது; காட்டிக் கொள்ளவில்லை. வெறுமையாக இருந்த கோப்பைகளை நிரப்பிவிட்டேன்.

மிகவும் திடமாக இருக்கிறேன். 'உது எல்லாம் அசிங்கம். வாழ்வில் ஒழுக்கம் முக்கியம்' என நான் கண்ட கனவுகள் அடிக்கடி எனது நண்பன் வருகையால் உடையத் தொடங்கியது. உடைத்தது அவன்தான் எனச் சொல்லிவிட முடியாது. எனது அடிமனதில் இதற்கான பலங்கள் இருக்கவில்லை. பலவீனங்களே இருந்திருக்கின்றது. வெளியே பலமாக இருந்த அனைத்தும் கறையான் அரித்த மரம் போல் போலியானது என்பதை உணர்ந்து கொண்டேன். நண்பனின் வரவை அடிக்கடி எனது மனது வரவேற்றது. அசிங்கமாக அவன் சொன்ன கதைகளெல்லாம் இப்போது மயக்கத்தை ஏற்படுத்தியது. தண்ணியடித்துவிட்டு சிலநேரங்களில் அவன் தனது ஊரைப்பற்றியும், குடும்பத்தைப்பற்றியும் கலங்கிய கண்களுடன் பேசும்பொழுது , "சரி, சரி ஏதாவது முசுப்பாத்தியாய்க் கதையன்" எனச் சொல்லி அவனது வேதனைகளில் கவனம் செலுத்தாமல், வேதனையின் மாற்றாக அவன் சென்ற இடங்களைப் பற்றி அறிவதில், கதை கதையாகக் கேட்பதில் எனக்கு சுகமாக இருந்தது; ஆர்வமாகவிருந்தது. இப்படி ஆரம்பித்ததன் அறுவடைதான் அறையெங்கும் சிதறிக் கிடக்கும் சிகரட் துண்டுகள். மனம் நொந்து போனது.

அவன் சொல்வதெல்லாம் நியாயமாகவிருந்தது. சும்மா அவசரப்பட்டுக் கலியாணத்தைக் கட்டி மனைவி, பிள்ளைகள், வாடகை, உடைகள், நகைகள் என நாராய்ப் போவதை விட இப்படிப் பெண்களிடம் போய் வந்தால் பிரச்சினை இல்லாத வாழ்வாகிவிடும். அவர்களும் அதற்கென்று இருக்கிறார்கள்; நாங்களும் அதற்கென்று போகிறோம்; பேந்து என்ன பிரச்சனை. சின்னதாகக் காசு மாறும் அவ்வளவுதான் பிரச்சனை. பிறகு பார்க்கலாம் கலியாணம் கட்டுவதுபற்றி, அது மட்டுமில்லை. விதம் விதமான பெண்களையும் பார்க்கலாம். கலியாணம் என்றால் சாகும் வரை ஒரு பொம்புளையுடன் குப்பை கொட்ட வேண்டியதுதான். அவனது

விளக்கங்கள் மனதுக்கு இதமாகவே இருந்தது. அந்த இடத்துக்குப் போறதென்று அன்றைக்கு எடுத்த முடிவு... அறையில் புகைத்தெறிந்து கிடந்த சிகரட் துண்டுகள் வேடிக்கை பார்ப்பதுபோல்... கண்கள் சூடாகியது.

பாரிசில் அந்த வீதிகளில் எத்தனையோ தடவைகள் போய் வந்திருக்கிறேன்; மடியில் கனம் இல்லை. ஆனால், இன்று முதல் தடவையாக நடப்பதுபோல் ஒரு உணர்வு. வீதிகளின் இரு பக்கங்களையும் உற்றுப் பார்த்து புதிய உலகத்தைப் புரிந்துகொண்டு, இரண்டு வீதிகளுக்கு நடுவே மரங்கள் நாட்டப்பட்டிருக்கும் நடைபாதையில் சிகரட் ஒன்றைப் பற்ற வைத்து நடக்கும்பொழுது மரங்களில் இருந்து கொட்டிய சருகுகளின் சத்தம் வழக்கத்தைவிடப் பெரிதாகக் கேட்பது புது அனுபவம்தான். வீதியின் இருமருங்குகளிலும் வித்தியாசமான வயதில், வேறு வேறு இனங்களைச் சேர்ந்த, மாறுபட்ட உடைகளுடன் தனியாகவும் கூட்டமாகவும் எதையோ எதிர்பார்த்துக் காத்து நிற்கின்றார்கள். அவர்களில் பலர் சிகரட் புகைத்துக் கொண்டிருக்கிறார்கள். இது மாலைப்பொழுதின் வழமையான காட்சியானாலும் இன்று அவைகள் புதிய காட்சியாக, கள்ளப்பட்ட மனதில் தோன்றியது. அடிக்கடி நண்பன் 'பயப்பிடாதை' என்பதுபோல் முதுகில் தட்டி சிரித்துக் கொண்டான்.

உடைகள் விற்கும் கடை ஒன்றுக்கும், துரித உணவுச்சாலை ஒன்றுக்கும் இடைப்பட்ட வாசற்கதவில் நின்றிருந்த மூன்று நான்கு பெண்கள் நண்பனின் பெயர் சொல்லி அழைத்துச் சுகம் விசாரித்தார்கள். «அடப்பாவி, இவன் பெரிய கில்லாடியாக இருப்பான்போல் இருக்கிறதே» என நினைக்கத் தோன்றியது. அந்தப் பெண்கள் கதவைத் திறந்து உள்ளே அழைத்தார்கள். நண்பன் பெருமையுடன் என்னைப் பார்த்தான். உள்ளே சென்றோம். வரவேற்பறை மிகவும் சீராகவிருந்தது. நிறையப் பொருட்கள் இருக்கவில்லை. ஒரு தொலைக்காட்சிப் பெட்டி, மூன்று நான்குபேர் உட்காரக் கூடிய இரண்டு மென்மையான இருக்கைகள் இருந்தன. மூலை ஒன்றில் தேவதை போல் அழகான ஒரு வெள்ளைச்சிலை வைக்கப்பட்டிருந்தது. அந்தப் பெண்கள் மிகவும் கலகலப்பாகக் கைகளைக் காட்டி, தோள்களை உயர்த்தி அழகான சீனப் பொம்மை போல் கதைத்துக் கொண்டிருந்தார்கள். சில நிமிடங்களின்பின் அதில் ஒரு பெண் எங்களில் யார் வேண்டும் என்பதுபோல் மெல்லிய குரலில் கேட்டாள். நண்பன் என்னைப் பார்த்தான்.

அங்குள்ள ஒரு அறைக்குள் அழைத்துச் சென்று கதவைப் பூட்டியவள் புன்சிரிப்புடன் பார்த்தாள். அவளது தலைமயிர் சுருளாக கட்டையாக வெட்டப்பட்டிருந்தது. அந்த அறையிலும் பெரிதாக பொருட்கள் இருக்கவில்லை. இரண்டு பேர் படுக்கக்கூடிய ஒரு கட்டில், அளவான அலுமாரி இருந்தது. சிகப்புப் பூக்கள் நிறைந்த பரந்த புல்வெளியில் பறவைகள் பறப்பது போன்ற அகன்ற Claude Monet யின் ஓவியம் ஒன்று சுவரில் மாட்டப்பட்டிருந்தது. 'இந்த இடத்தில் அந்த ஓவியம் எப்படி?' கேட்க நினைத்ததை பண்புடன் கேட்காது விட்டேன். இவைகளே அந்த அறைக்குப் போதுமானவை என்பது போல் இருந்தது. மீண்டும் அதே புன்னகையுடன் அழைத்தாள். படுக்கையில் ஒரு பெண்ணுடன்... கனவு காண்கிறேனா என்பது போல் ஒரு மயக்கம். உடலெல்லாம் ஒரு விதமான கிளர்ச்சி. மிகவும் நாகரிகத்துடன் அனுமதி கேட்டேன். ஆச்சரியமாக



என்னைப் பார்த்து அப்படி ஏன் சிரிக்கிறாள்? புதிய புதுமையான அனுபவம். எழுந்திருக்கையில் பிரியப் போகிறோமே என்ற நினைவு வாட்டுவது போல் இருந்தது. கட்டிய ணைத்து முத்தம் கொடுத்தேன். இப்பவும் சிரித்தாள். அறைக் கதவைத் திறந்து கொண்டாள்.

என்றுமில்லாதவாறு நல்லதொரு மதுச் சாலைக்குச் சென்று நண்பனுடன் மது அருந்தி சுகமான நினைவுகளுடன் சிகரட் புகையை அலை யலையாக விட்டு, பிறவிப்பயன் இப்படியும் உண்டா என ஏங்கி உறைந்திருந்தேன். மிக நெருக்கமாக எனது முகத்தை உற்றுப் பார்த்த நண்பன் தனது புருவங்களை உயர்த்தி,

"எப்படி?" என்று பிரெஞ்சில் கேட்டான்.

"மிக அதிசயம். மிக நன்று" என்று நானும் பிரெஞ்சிலேயே பதில் சொன்னேன்.

தண்ணி ஏற ஏற, தமிழை மறந்தோம். பிரெஞ்சில் பேசினோம். ஆங்கிலத்தில் பேசினோம். சிறிது நேரம் கழித்து என்ன மொழியில் பேசுகிறோம் என்பது எமக்கே புரியாமல் தடுமாறினோம். அதனால் பிரெஞ்சில் மட்டும் பேசுவோம் என்று ஒரு உடன்பாட்டுக்கு வந்தோம். நடந்து முடிந்த அனுபவத்தை மிக இரகசியமாக நான் பேச, மிக அருகில் நெருங்கி விடுப்புப் பிடுங்குவதுபோல் கேட்டுக் கொண்டிருந்த அவன் தனது கிளாசில் இருந்த விஸ்க்கியை ஒரே இழுவையில் முடித்து விட்டு தனது அனுபவங்களையும், இந்த சமாச்சாரத்தில் உள்ள நெளிவு சுளிவுகளையும், இதில் எமது கெட்டித்தனம் எங்கே தங்கி யிருக்கிறது எனவும் பிரெஞ்சில் நன்கு தேர்ந்தெ டுக்கப்பட்ட வார்த்தைகளில் அவன் பேசிக் கொண்டிருந்த பொழுது திறமையுடன் விரிவுரை செய்யும் ஒரு பேராசிரியர் போல் இருந்தது. முதன்முதலாக காதல் கைகூடிய பாடசாலை

மாணவன் போல் நித்திரை இல்லாது அன்றைய இரவு கழிந்தது.

பல நாட்களாக அங்கு சென்று வந்துவிட்டேன். அந்த சுகத்தின் நினைவுகள் மீண்டும் அங்கு போகவேண்டும், அதே பெண்ணைச் சந்திக்க வேண்டும் என்ற விருப்பு இப்போவாட்டத் தொடங்கியது. இப்போதெல்லாம் தனியவே நான் சென்று வந்தேன். மிக ஆவலுடன் சருகுகளை மிதித்து வேகமாக அங்கு சென்ற பொழுது;அப்பாடா... அவள் நின்றிருந்தாள். "ஹலோ நண்பரே!" எனச் சிரித்தாள். எனது அவசரத்தை அவள் புரிந்திருக்க வேண்டும்; என்ன என்பதுபோல் கள்ளச் சிரிப்புடன் கண்களை ஆட்டினாள். இப்படிக் கண்களால் கதைக்கும் அழகு பிரான்சில் எல்லாப் பெண்களிடமும் நான் காணும் அதிசயம். அதுவும் இப்படிப் பட்ட பெண்களுக்கு புதிதாகவா சொல்லித் தரவேண்டும். அவளது கையைப் பிடித்து இறுக்கி, எனது வருகையின் நோக்கத்தைப் புரிய வைத்தேன். இவளுக்கு எங்கிருந்து தான் இந்த அழகிய புன்னகை வருகின்றது.

அறையின் கதவைப் பூட்டியவள் என்னைப் பார்த்து முத்தம் கொடுப்பதுபோல் பாவனை செய்தாள். நண்பன் அடிக்கடி சொல்லுவான்; இந்தப் பெண்கள் எல்லோருடனும் இதுபோன்று நட்பாக நடக்க மாட்டார்கள். வந்தியா, அலுவலை முடித்தியா போ என்பதுபோல் பழகிப் பழக்கப் பட்டுவிட்டார்கள். ஆனால் தங்க ளுக்குப் பிடித்த, தங்களையே விரும்பித் தேடி வரும், உறவின் போது கொடுமையாக நடந்து கொள்ளாத, தங்கள் பூராயத்தைக் கேட்டுத் தொந்தரவு பண்ணாத ஆண்களுடன் அவர்கள் தாராள மாகவே நடந்து கொள்வார்கள். அவளது செய்கைகளில் இருந்து, அவளுக்கு என்னைப் பிடித்திருக்க வேண்டும் என்னும் நினைப்பு மகிழ்வாகத்தானிருந்தது. அருகில் வந்து உட்கார்ந்து மெதுவாக எனது காதின் சோணையை அவள் கடித்தபோது அவளது சுவாசம் புதியதொரு வாசனையாகத் தோன்றியது.

"உனது பெயரை நான் தெரிந்து கொள்ளலாமா?"

"ரோசலின். ஏன்? பெயர் கண்டிப்பாகத் தெரிய வேண்டுமா?"

"கூப்பிட வசதியாக இருக்குமே"

"அப்போ நீ என்னிடம் அடிக்கடி வருவாயா?"

"ஆம்"

அவளது மார்பகங்களுக்கி டையே முத்தமிட்டேன். கூச்சத் துடன் கைகளால் எனது முகத் தைத் திருப்பியவள் புதியதொரு உறவுடன் என்னைப் பார்த்தாள். சிறிது நேரம் அவள் மௌனமாக இருந்தாள். அவளது முகத்தில் தோன்றி இருக்கும் வெட்கம் ஏதோவொரு மாற்றத்தைப் புரிய வைத்தது.

"உனது பெயரென்ன?" மௌனம் உடைந்தது.

நான் சொன்னேன்.

"அய்யோ உனது பெயரைச் சொல்வது மிகவும் கடினம்" என்றவள், எனது பெயரைத் திரும்பவும் சொல்லச் சொன்னாள்.

சொன்னேன்.

மீண்டும் மீண்டும் எனது பெயரைச் சொல்ல முயற்சித்துத் தடுமாறி நின்றாள்.

"சரி, உனது பெயரை நீயே வைத்துக்கொள். நான் உன்னை இப்படித்தான் அழைப்பேன் "என எனக்கொரு பெயர் சூட்டினாள்.

பல காலம் பழகிய காதலியைப் போல் எனது தோளில் கை போட்டுக் கதைத்துக் கொண்டி ருந்தாள். நண்பன் சொல்வான், அவர்கள் இப்படிப்பட்ட பெண்க ளாக இருந்தாலும் அவர்களது வாழ்வில் மறுபக்கமும் இருக்கிறது. சாதாரண ஒரு பெண்ணைப் போன்ற எல்லாவித விருப்பங்களும், குண இயல்புகளும் அவர்களுக்கும் இருக்கும் என்பதை நாம் கண்டிப் பாகப் புரிந்து கொள்ள வேண்டும். எல்லாவற்றையும் விட அவர்களை மனிதப் பிறப்புகளாக மதிக்க வேண்டும்.

"நீ பிரெஞ்சுப் பெண்ணா?" பார்வைக்கு அவள் எந்த நாட்டுப் பெண் என்று புரிந்து கொள்ள முடியாமல் இருந்தது.

"நோ, நான் போர்த்துக்கல் ... ஏன் நண்பரே, பிரெஞ்சுப் பெண்கள் என்றால் உனக்கு விருப்பமா..."

அவள் முடிக்கவில்லை. கட்டிலில் வீழ்த்திவிட்டேன்.

எழுந்திருந்தபோது வியர்வை கொட்டிக் கொண்டிருந்தது. நான் ஆடை போட்டுக்கொள்வதை அவள் படுக்கையில் படுத்திருந்தே பார்த்துக் கொண்டிருந்தாள். அவளது குறும்பான சிரிப்பு பல அர்த்தங்களை உணர்த்தி என்னை மகிழ்வாக்கியது. எழுந்து வந்தவள் எனது வியர்வையைத் துடைத்து விட்டாள்.

"ஏய் ரோசலின் நீ உடைகளை அணிந்துகொள்."

அவசியமா என்பதுபோல் பாரத்தவள் அலுமாரியைத் திறந்து Hugo Boss போத்தலைத் தந்தாள். எனக்கு வியர்த்திருந்ததால் அதை அவள் எனக்குத் தந்தாள். நான் நன்றி சொன்னேன். அது ஆண்கள் பாவிக்கும் perfum. உன்னிடம் எப்படி வந்தது என நான் கேட்கவில்லை. வாசல்வரை வந்தவளிடம் "நீ முழு இரவுக்கு வருவியா? எவ்வளவு கேட்பாய்?" என்றேன்.

"கண்டிப்பாக வருவேன். உனக்குக் கட்டுப்படியாகவே கேட்கிறேன். எங்கே, இங்கேயா அல்லது உன்னிடம் இடமிருக்கா?" எனது தோளில் கையைப் போட்டுக் கொண்டாள்.

"எனது அறைக்கு வாயேன். நான் தனியாகத்தான் அங்கி ருக்கிறேன்."

"ஓகே."

நாளைக் குறித்துக் கொண் டோம்.

ஒரே பரபரப்பாக இருந்தது. ரோசலினைப் போய் அழைத்து வரவேண்டும். இப்போதுதான் வெளியே போய் சாமான்கள் வாங்கிவந்தது. வழக்கம்போல் விஸ்க்கியுடன், எனக்குப் பழக்க மில்லாத பியர், வைன் போன்ற குடிவகைகளையும் வாங்கி வந்தேன். ரோசலின் குடிப்பாளோ என்பது இதுவரை எனக்குத் தெரியாமல் போய்விட்டது. அவள் விஸ்க்கி குடிக்க மறுத்து பியர், வைன் கேட்டால் உடன் தயார் நிலையில் இருக்கட்டுமேயென எல்லாவற்றையும் வாங்கி வைத் தேன். வெள்ளை வைன், சிகப்பு வைன், ரோஸ் வைன் இதில் எந்த வைனைப் பெண்கள் விரும்பிக் குடிப்பார்கள், ஒரு நாசமும் விளங்கவில்லை. ஆனால் சிகப்பு

வைன் மட்டும் Bordeaux வைனாகப் பார்த்து அதுவும் விலை உயர்ந்ததைத் தேர்ந்தெடுத்தேன். இத்தனைக்கும் இடையில் உடம்பு வேதனையாக இருந்தது. நேற்று வெள்ளிக் கிழமை என்பதால் வேலை செய்யுமிடத்தில் கடுமையான வேலை. ஆனாலும் ரோசலினின் வருகையின் மகிழ்ச்சி அனைத்து வேதனையையும் களைப்பையும் மறைத்து உடலில் ஒரு உற்சாகத்தை ஏற்படுத்தியது. பெரியதொரு விருந்தினர் வருவதுபோல் அறையைச் சுத்தமாக்கி, அலங்கரித்து திடீரென நினைவுக்கு வர கீழே ஓடிச் சென்று ஒரு பூங்கொத்தையும் வாங்கிக் கொண்டேன். எல்லாம் சரி என்ற திருப்தி வரும்வரை அறையை ஒழுங்கு செய்து home sprayயையும் கொஞ்சம் அடித்து விட்டேன்.

ரோசலின் இருக்குமிடத்திற்கு அண்மையில் கார் விட இடம் தேடுவது எப்பவும் கடினம் என்பதால் நான் அவளிடம் மெற்றோவில் போய்க்கொள்வேன். இன்று நேரம் சொல்லி வெளியே காத்திருக்கும்படி சொல்லி இருந்ததால் பயமின்றி காரை எடுத்துக் கொண்டேன். காருக்குள்ளும் கொஞ்சம் வாசனையை அடித்து விட்டேன். எனது காரைக் கண்டவள், ஹ்ரீஊஸி என ஆச்சரியத்துடன் உள்ளே ஏறிக் கொண்டாள். எனக்கு முத்தம் கூடத் தரவில்லை. “ஏய், இது பெரிய பெரிய முதலாளிமார் ஓடும் காரல்லவா?”எனக்கேட்டு, அது எந்த ரகக் கார் என்பதையும் அவளே கூறி தான் நினைத்ததை உறுதி செய்து அதிசயித்துப் போனாள்.

“இந்த அழகிய காருக்கு நான்தானே முதலாளி” என்று நான் சொன்னபோது கண்கள் கலங்க என்னைப் பார்த்தாள். சிறிது நிமிடத்தின் பின் டாஸ் போர்ட்டைத் திறந்து அங்கேயிருந்த hand towel ஐ எடுத்து முகர்ந்து பார்த்தவள், மிகவும் மென்மையான வாசனையாக இருப்பதாகக்கூறி தனது முகத்தைத் துடைத்தாள்; திடீரென, “ஏய், இது நீ மட்டும் பாவிப்பதுதானே” எனக் கேட்டுத் திருப்திப்பட்டுக் கொண்டாள்.

எனது அறையைச் சுற்றி ஒரு நோட்டம் விட்டாள். சுவரில் மாட்டப்பட்டிருந்த படங்களையும், அடுக்கி வைக்கப்பட்டிருந்த புத்தகங்களையும் அந்நியத்துடன் பார்த்தாள். சில புத்தகங்களை எடுத்து பக்கங்களைத் தட்டிப் பார்த்தவள் பிரெஞ்சுமொழியில் அவள் எடுத்த புத்தகங்களிலிருந்தும் அதற்கும் தனக்கும் சம்பந்தமில்லை என்பது போல் உதடுகளைச் சுழித்துவிட்டு தொலைக்காட்சியில் கவனம் திருப்பினாள். நான் அவளை வரவேற்பதில் கவனமாக இருந்தேன். மேசையில் வைக்கப்பட்டிருந்த சிற்றுண்டிகளை அவளுக்குக் காட்டினேன். என்னையும் வந்து தன்னுடன் உட்காரும்படி கேட்டாள். எனக்கு ஒரே மகிழ்ச்சி. என்னிடம் விருந்தினர்கள் என்று யாரும் வந்ததில்லை. அதுவும் இப்போ வந்திருப்பது பெண் விருந்தினர் மட்டுமல்ல. என்னுடன் எப்பவும் உடலுறவு கொள்ளத் தயாரான விருந்தினர் என்பது ஒருவித கிளர்ச்சியை ஊட்டும் உண்மை.

அவள் விருப்பப்படி ஒலிவ் எண்ணெயில் பிரட்டி எடுத்த மீனையும், உருளைக்கிழங்குத் துண்டு களையும் சூட்டில் வைத்துவிட்டு, தக்காளி, சோளம், பயித்தம் முளை ஆகியவைகளை பச்சை சலாட் இலைகளுடன் கலந்து மேசையில் வைத்து விட்டு



அவளருகே சென்று “விஸ்கி...,பியர்..., வைன்...” என இழுத்தேன்.

இரண்டு கிளாஸ்களில் விஸ்க்கியை ஊற்றி வைத்தேன். மகிழ்வுடன் இரண்டு கிளாஸ்களும் உரசப்பட்டன. நான் சமையலில் ஈடுபட்டிருக்கும் பொழுது அடிக்கடி வந்து “உதவட்டுமா? ” என்று கேட்டுக் கொண்டிருந்தாள்.

நாங்கள் இடைவெளிகளில் முத்தங்கள் பரிமாறிக் கொள்ளவும் மறக்கவில்லை. இதற்கிடையில் நான் மூன்று கிளாஸ் விஸ்க்கி ஊற்றி விட்டேன். அவள் ஒரு கிளாஸின் பாதிகூட முடிக்காமல் போதை ஏறியதுபோல் கொஞ்சத் தொடங்கினாள்.

இந்த வெள்ளைகள் இப்படித்தான். ஒரு கிளாஸ் விஸ்க்கியை வைத்துக் கொண்டு ஒரு விருந்து முடியும்வரை சொட்டு சொட்டாக அடித்துக் கதைத்துக் கொண்டிருப்பார்கள். எங்கடை சனம் எண்டால் குறைந்தது ஆளுக்கு அரைப் போத்தல் அடித்துவிட்டுத் தடுமாறுவார்கள்.

ஒரு முறை பெரியவர் ஒருவர் சொன்னார், “தம்பி வெள்ளைச்சனம் வெளியில் இருந்து தண்ணியடிச்சிட்டு மெதுவாக வீட்டுக்குள் போய்விடும். ஆனால், எங்கடை சனம் வீட்டுக்கை தண்ணி அடிச்சிட்டு அட்டகாசம் பண்ணிக் கொண்டு வீதிக்கு வந்து விடும்.” உண்மைதான் இறுதிவரை அவள் ஒரு கிளாசுக்கு மேல் ஊற்றிக் கொள்ளவில்லை; சாப்பிட்டு முடிந்து எழுந்தபோது தடுமாறினாள்.

அன்றைய இரவு சுகமான இரவு. தூங்கவேயில்லை. அவள் எனது விருப்பங்களுக்குத் தாராளமாக நடந்து கொண்டாள். அவைகளை அவள் விரும்புவது போலவும்



இருந்தது. நண்பன் சொல்வான், மனம் ஒப்பிய காமத்தில் களைப்புத் தெரியாது. இப்படியான இரவுகள் எனக்கு விருப்பமாகிக் கொண்டு வந்தது. அவளும் அப்படி யான ஒரு உறவை விரும்பி நின்றாள். ஓய்வான நாட்களிலும், அவளுக்கு வெறுமையாக இருக் கும் நாட்களிலும் எனது அறைக்கு வந்து போகத் தொடங்கினாள். கண்களுக்குத் தெரியாமல் இருவரி டையேயும் ஒருவிதமான உரிமை வளரத் தொடங்கியது.

நாளடைவில் அவளுடனான உடலுறவுக்கு அப்பால் அவளைத் தினமும் பார்க்கவேண்டும், அவளு டன் பேசிக் கொண்டிருக்க வேண்டும் என்பது போன்ற ஒரு பைத்தியநிலைக்கு நான் தள்ளப் பட்டுக் கொண்டிருந்தேன். ஆனால், அவளது சூழ்நிலை கருதி இப்படிப் பட்ட ஆசைகளைத் தவிர்த்துக் கொள்வேன். இதே மனக் குழப்பத்தில் அவளும் இருந்தி ருக்கலாம். கைத்தொலைபேசியில் நினைத்தபொழுதெல்லாம் அழைத்துக் கதைக்கத் தொடங் கினாள். அவளை எப்படியும் பார்த்து விட வேண்டுமென அன்று மனம் அரித்ததால் அங்கு சென்றேன். அவளது வீட்டு வாசலில் நின்ற பெண்மூலம் அவள் உள்ளே இருப்பதை உறுதிசெய்து கொண்டு வரவேற்பறையில் நுழைந்தேன். அவளை அங்கு காணவில்லை. அவளது அறை பூட்டப்பட்டிருந்தது. எங்கே போயிருப்பாள்? இங்கிருப்ப தாகத்தானே அவளுடன் இருக்கும் பெண் சொன்னாள். காத்திருப்போம் என எண்ணியபோது அவளது அறை திறக்கப்பட்டது. அதற்குள் இருந்து உயரமான இத்தாலியன்போல் தோற்றம் கொண்ட ஆண் வெளி யேறினான். திடீரென அதிர்ச்சி யாகவும் பொறாமையாகவும் பொறுக்க முடியாமலும் இருந்தது. அவள் கதவிடுக்கில் எட்டிப் பார்த்து "ஒரு நிமிஷம்" எனச் சொல்லிச் சிரித்தாள்.

ஏன்தான் எனது மனம் இப்படி அலைகிறது. அவள் என்ன என்ரை பொண்டாட்டியா? காதலியா? அல்லது தன்னைப் பத்தினி என்று எப்போதாவது சொன்னவளா? நான் அவளைக் காணும்போது அப்படி யானதொரு பெண்ணாகத்தானே கண்டேன் என மனதைத் தேற்ற முயன்றாலும் ஏதோ ஒரு முள் குத்துவது போல் இருந்தது. அவள் என்மீது கொண்டிருக்கும் அன்பை நினைத்தபோது அவள்மீது பச்சாதாபம் ஏற்பட்டது. அவள் பாவம். நான் அப்படி சொல்லாமல் கொள்ளாமல் வந்திருக்கக்கூடாது. அவளது மனம் வருத்தப்பட்டி ருக்குமா; என்னைப்பற்றி என்ன நினைத்திருப்பாள்? இப்படி வேதனையுடன் சிந்தித்துக் கொண்டிருந்தபோது ரோசலின் handyயில் பேசினாள்.

"ஏய் நண்பரே எங்கே ஓடிவிட்டீர்? வெளியே வந்து பார்த்தால் காணவில்லையே"

நான் மௌனமாக.

"கோபமா, எனக்கெல்லாம் புரியும். நீ உனது வக்கிரத்தைக் காட்டி விட்டாய்"

"இல்லையே, அப்படி என்ன நடந்து விட்டது"

"சரி. இன்றிரவு நீ எனது விருந்தாளி. ஆமாம் எனது அறையில்தான்! மறுக்காமல் வந்து விடு. காத்திருப்பேன்."

அவள் எனது பதிலை எதிர்பார்க்கவில்லை. தொடர்பைத் துண்டித்துக் கொண்டாள்.

தான் செய்தது தவறு என்று எண்ணியா சமாளிக்கக் கூப்பிடுக றாள். இல்லையே , அவள் எந்தத் தவறும் செய்து விடவில்லையே. அவள் தனது தொழிலைச் செய்தாள். எனது அன்பை, எனது உள்ளத்தில் ஏற்பட்ட நோவை, எனது நிலைமையைப் புரிந்து கொண்டு நல்ல உள்ளத்துடன் அழைக்கிறாள். அவள்மீதான மரியாதை என்னிடத்தில் அதிகரிக் கத்தான் செய்தது.

எல்லா ஏற்பாடுகளும் அவளது அறையிலேயே செய்யப்பட்டி ருந்தது. சின்னதான ஒரு மேசை போடப்பட்டிருந்தது. பூக்களால் ஆங்காங்கு அலங்கரிக்கப் பட்டிருந்தது. உள்ளே நான் சென்றபோது முத்தமிட்டு வரவேற்றாள். அவள் சந்தோ ஷமாக இருந்தாள். எனது வரவு அவளுக்கு அளவிட முடியாத

மகிழ்ச்சி என்பதை அவள் முகம் காட்டியது. அவளிடம் வழமையாக வேறு எதையோ அடைய வரும் நான் இன்று ஏதோ ஒரு உறவினன்போல் அவளுக்கு மிக வேண்டியவன்போல் வந்திருப்பது இருவருக்கும் மகிழ்ச்சியே. நீண்ட நேரமாகப் பேசிக்கொண்டிருந்தாள். தனது சக நண்பிகள் சமைப்ப தாகவும், எனது சுவை, உணவுத் தேவை அவளுக்குத் தெரிந்திருந் ததால் என்னிடம் உணவுபற்றி அனுமதி கேட்கவில்லை எனக் கூறினாள்.

நான் விரும்பும் டிம்பிள் விஸ்கியை மேசையில் வைத்து விட்டு என்னைப் பார்த்துக் கண்ணடித்தாள். ஓகே என்பது போல் தலையை ஆட்டினேன். விஸ்கியை ஒரு மிடறு விழுங்கிக் கொண்டேன். உடம்பின் நரம்புகள் சிலிர்த்தது. சிகரட்டை எடுத்து உதட்டில் வைத்தபோது, தான் பற்ற வைப்பதாகக் கூறி அருகில் வந்தாள். அவளில் இருந்து மிக மென்மையான, ஏதோ ஒரு மலரை நினைவுபடுத்துவது போல் வாசனை வந்தது.

வெண்ணெயில் வறுத்த முந்திரிகைப் பருப்பைக் கொண்டு வந்து வைத்தவளின் கைவிரலில் நான் தயாராகக் கொண்டு வந்த தங்க மோதிரத்தைப் போட்டேன். உருகியே விட்டாள். கன்னத்தில் பத்துத் தடவைக்கு மேல் முத்த மிட்டவள் கண்கள் கலங்கி என்னைப் பார்த்தாள். "நான் உனது நல்ல நண்பனாக எப்பவும் இருப்பேன் " என நான் கூறியதும் தனது இடது மார்பில் கை வைத்து "ஹம்துல்லா" என அரபில் அவள் கூறியதும் நான் திடுக்கிட்டுப் போனேன்.

"ஏய், நீ அரபுப் பெண்ணா?"

"ஆம் "

என்பதுபோல் தலையை ஆட்டியவள்,

"நீ என்னில் இவ்வளவு அன்பாக இருக்கும்போது எனது தொழிலுக்கான பொய் அறிமுகத் தைத் தொடர்ந்தும் பேண விரும்ப வில்லை. எனது பெயர் தஸ்லிமா. நான் மொராக்கோ நாட்டைச் சேர்ந்தவள்" என அவள் பேசிக் கொண்டிருக்கும்போது இதுவரை அவதானிக்காத அவளது அழ கான பிரெஞ்சு மொழி உச்சரிப்பை அவதானித்தேன்.

சிறியதோர் மௌனம்.

இருவரும் ஒன்றும் பேசவில்லை. இப்படியானதொரு இடைவெளியை நான் விரும்பவில்லை.

"நீ ஒரு முஸ்லிம் பெண்ணா? உங்கள் ஆகமத்தின்படி நீ செய்வது பாவமில்லையா?"

மெதுவாக சிரித்துக்கொண்டு எனது விரல்களைத் தடவியபடி, "ஏன் உங்கள் ஆகமத்தில் மட்டும் இது புண்ணியம் என்றா எழுதி இருக்கு" என அவள் கேட்டது ஆயிரம் கரங்கள் சேர்ந்து எனது முகத்தில் அறைந்ததுபோல் பதறிப் போனேன். எமது தேவை, நோக்கம் எதுவோ அதை விடுத்து இது போன்ற தேவையில்லாத அதிகப் பிரசங்கித்தனம் பற்றிய தவறை உணர்ந்தேன்.

என்னதான் இருந்தாலும் அன்றைய இரவு மிகவும் இனிமை யாகவே கழிந்தது. நான் அவளை மகிழ்விப்பதாக அவள் கூறும் போதெல்லாம் எனக்குப் பெருமை யாகவே இருக்கும். இப்படியான பெண்கள் உணர்வுபூர்வமாக எல்லோருடனும் உறவுகொள்ள மாட்டார்கள். சும்மா கடமையெனப் படுத்திருப்பார்கள். இவள் என்னுடன் உணர்வுபூர்வமாக உறவு கொள்கிறாள் என்பதை அவளுடன் உறவு கொள்ளும்போதெல்லாம் உணர்கிறேன். உறவின் போதெல் லாம் அவள் சுகம் பெறுகிறாள், என்மூலம் திருப்தி கொள்கிறாள் என்பது எனக்கு மகிழ்ச்சியே. ஆயிரம் தருமம் செய்வதை விட தன்னிடம் அடைபவளை மகிழ் விப்பதே உலகில் உயர்ந்தது என நான் நம்புகிறேன்.

காலையில் சிறியதொரு பாண் துண்டும் அருமையான காப்பியும் தந்தாள். சிறிது நேரம் வரவேற் பறையில் இருந்து பேசிவிட்டு விடைபெற்றேன். வாசல்வரை வந்தவளின் கையில் எவ்வளவு என்று கணக்குப் பார்க்காமல் பணத்தைத் திணித்தேன். செல்ல மாகக் கோபம் கொண்டவள் எனது கையில் மீண்டும் பணத்தைத் தந்து,

"நண்பரே! விருந்தாளியிடம் இருந்து யாராவது பணம் பெறுவ துண்டா? அது மட்டுமல்ல, இனி மேல் எம்மிடையே உறவு மட்டுமே இருக்கும். வியாபாரம் எதுவும் இருக் காது. இருக்கக் கூடாது" எனக் கூறி எனது உதடுகளில் தனது சுட்டு விரலால் தடவி விட்டாள்.

இரண்டு நாட்கள் இருக்காது. தனது தாய் இறந்துவிட்டதாகவும் தான் தனது நாட்டுக்குப் போவ தாகவும் தொலைபேசியில் கூறினாள். அவளை ஏற்றிய எனது கார் விமானநிலையம் நோக்கிப் புறப்பட்டது. போகும் வழியெல்லாம் பெருமூச்சு விட்டபடி இருந்தாள். அவளது தாயார் இறந்த துயரம் ஒரு புறம், என்னைப் பிரியும் துயரம் ஒரு புறம் அவளை வாட்டியது.

விமானநிலையத்தில் பயணத் துக்கான சம்பிரதாயங்களை முடித்துக்கொண்டு உள்ளே புறப்பட்டவளின் கண்கள் சிவந்து கலங்கி உதடுகள் காய்ந்தி ருந்தது. என்னையே குத்திட்டுப் பார்த்துக் கொண்டிருந்தாள். முகவரி, தொடர்பு கொள்ள தொலை பேசி இலக்கம் கேட்டேன். அது ஒன்றும் வேண்டாம் உடனே வந்துவிடுவேன். அடிக்கடி எனக் குத் தொலைபேசி எடுப்பதாகக் கூறி விடைபெற்ற அவளது உதடு களில் முத்தம் கொடுத்தேன். அது மகிழ்ச்சியான முத்தமல்ல. அவள் உள்ளே சென்ற பாதையைப் பார்த்துக்கொண்டு எவ்வளவு நேரம்தான் நிற்பது?

சில நாட்கள் வேலை, வேறு சோலி என்று நாட்கள் கடந்தது. அவளிடம் இருந்து எந்தவித தொலைபேசி அழைப்புகளும் வரவில்லை என்பதுடன் அவள் பற்றிய எந்தத் தகவலும் பெற முடியாதிருந்தது. அவளது சக தொழிலாளிப் பெண்களிடம் சென்று விசாரித்தேன். அனைவரும் ஒன்று சேர தெரியாது எனக் கூறினார்கள்.

நாளாக நாளாக வேதனையாக இருந்தது. அவள் போனால் இன்னொரு பெண் என்னும் நினைப்பு உயிரைக் கொல்லுவதுபோல் இருந்தது. என்னில் ஏற்படும் மாற்றம் என்னையே ஆச்சரியம் கொள்ள வைத்தது. அவளுக்கும் எனக் குமான உறவின் ஆழம் அவளின் பிரிவின்போது தெரிகிறது. சரி வந்து விடுவாள்தானே என்னும் நினைப்பிற்கு இடமில்லாது உடனே அவள் வரவேண்டும் என மனம்

ஏங்கியது. தினமும் அவளது இடத்துக்குச் சென்று வந்தேன். தகவலே இல்லை.

இரண்டு மாதங்கள் மிகக் கொடுமையாக என்னைத் துன்புறுத்தி உருண்டோடியும் அவள் பற்றிய எந்தத் தகவலையும் என்னால் அறிந்துகொள்ள முடியாமல் இருந்தது.

அவள் பயணம் செய்த விமானக் கொம்பனியின் பிரதான அலுவலகம் சென்று, அவள் ஊருக்குப் போன நேரம், திகதி சொல்லி, அவளது முகவரி கிடைக்குமா எனக் கேட்டேன். பிரயாணிகளின் தகவல்கள் இரகசியமானது எனக் கூறி விபரம் தர மறுத்தார்கள்.

என்ன செய்வதென்றே தெரியாது தடுமாறினேன்.

அன்று மாலை அவளது இடத்துக்குச் சென்றேன். வெளியே நின்ற அவளது தோழி மிக வருத்தத்துடன் தாங்களும் இருப்பதாகக் கூறி அவள் பற்றிய தகவல்கள் கிடைக்காததுபற்றி ஆச்சரியப்பட்டாள். மிகவும் மனமொடிந்த நிலையில் அங்கிருந்து வெளியேறிவந்த போது, உள்ளேயிருந்து

"யார் வந்தது? "

என ஒரு பெண் கேட்டதற்கு, வெளியே நின்றிருந்தவள் "தஸ்லிமாவின் காதலன்"எனப் பதில் தந்ததும் விறைத்துப் போய்நின்று விட்டேன்.

"தஸ்லிமாவின் காதலன்" மீண்டும் மீண்டும் காதுகளில் ஒலித்தது. மனதுக்குள் இனம் புரியாத குதூகலம். மகிழ்ச்சியாக இருந்தது. ஆமாம் இப்போது புரிந்து விட்டது நான் எங்கே நிற்கிறேன் என்பது.

"தஸ்லிமாவின் காதலன்" என்பது எனக்கு மகிழ்ச்சி தரும் செய்தி.

மனவேதனை மறந்து "தஸ்லிமாவின் காதலன்" என்ற நினைப்பில் உறைந்தேன்.

எவ்வளவோ மாதங்கள் ஓடி விட்டது. அவள் வருவாள் எனத் திடமுடன்தான் இருக்கிறேன்.

அந்த மகிழ்ச்சியான செய்தியை தஸ்லிமாவிடம் சொல்லி விட வேண்டும் என்பதற்காக நான் காத்திருக்கிறேன்.

தஸ்லிமாவின் காதலன்.

## மூச்சோடு கலந்து விடு

உயிர் வரண்டு
வலிந்தென் விழிகள் நோக்கையில்
கடைக்கண்ணீர் துடைக்கும்
உன் விரல்களின் நகங்களில்
நான் பூசிய சாயம்
அழியாமல் துடை.

உன் ஒரு துளிக் கண்ணீரேனும்
என் இமைகளின் மீது சிந்த
உதடுகளில் முத்தமிடு
என் கடைசி மூச்சையும்
உனக்குள்ளேயே
ஊதிவிட்டுப்போகின்றேன்.

நான் மூச்சுவிட மறுத்தபின்
உடன்கட்டை ஏறாதே
நீ-மூச்சுவிடு.
எனதுமூச்சைப் பத்திரப்படுத்து.

என்னூருக்குப்போய்
என்னுறவுகளோடு கட்டியழு
கட்டியழும் ஆறுதல்
தொலைபேசிக் கண்ணீரில்
கிட்டாது உனக்கு.

எனது கடற்கரைக்குபோய்
உனது கைகளை விரித்து
அந்த உப்புக்காற்றை உள்வாங்கி
என் மூச்சோடு ஐக்கியப்படுத்து

பின்னர்-
நான் இறக்கவில்லையென்று எண்ணிக் கொண்டு
மனித வாழ்வை
எள்ளி நகைத்துவிடு.

**மெலிஞ்சிமுத்தன்.**